REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 14 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 88 இல. 271 | November 14, Saturday, 2020 | 20பக்கங்கள் | 30/-






தீபாவளியை முன்னிட்டு அலரிமாளிகைளில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ச ஆகியோர் தீபமேற்றி வைப்பதனை படத்தில் காணலாம்.



## தீபாவளி திருநாளை இல்லங்களில் இருந்தவாறே கொண்டாடவும்

### சுகாதார வழிமுறைகளை பின்பற்றவும் இராமச்சந்திர பாபுசர்மா கோரிக்கை

02

## இருளை அகற்றி ஒளி ஏற்றும் இந்துக்களின் உயர் பண்டிகை

### வாழ்விற்கு வழிகாட்டும் தீபாவளித் திருநாள் – பிரதமர்

கொவிட்19 நோய்த்தொற்றிருந்து இலங்கைத் திருநாடு விரைவில் மீள்வதற்கும் எம் மக்களுக்கு எல்லா சுபீட்சங்களையும் தரும் நல்லதோர் எதிர்காலத்தின் ஆரம்ப நாளாக இத்தீபாவளித் திருநாள் அமையட்டும் என தனது தீபவாளி வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இருளை அகற்றி ஒளி ஏற்றும் இந்து மக்களின் உயர்ந்த சமயப் பண்டிகைத் தினமான தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதிற் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தொடர்ந்தும் அவ்வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது

இருட்டு வழியிற் தீபம் இருந்தால் அதுவே வழிக்குத் துணையாக அமையும். மனித வாழ்க்கைப் பாதைக்கு அருட்தீபம் துணை நின்றால் ...ான ...ீபா ...லா ...யை ...கள்




## சமய வழிபாடுகளில் ஈடுபடுவது உள்ளங்களுக்கு அமைதியைத்தரும்

### தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி கோட்டாபய



முழு உலகமும் கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக பல்வேறு பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ள இச்சந்தர்ப்பத்தில் சமயக் கிரியைகளில் ஈடுபடுவது மனித உள்ளங்களுக்கு அமைதியை தருகின்றது. இந்த தீபத் திருநாளில் அந்த அமைதிக்காக எமது நாட்டிலும் உலகெங்கிலும் வாழும் அனைத்து இந்துக்களும் ஒருமனதாக கடவுளுக்காக அர்ப்பணிப்புகளை செய்வர் என்பது எனது நம்பிக்கையாகும். அது சிறந்ததோர் சமூகத்தையும் ஆரோக்கியமான வாழ்வையும் கட்டியெழுப்பும் எமது நோக்கத்திற்கு ஆசீர்வாதமாக அமையும் என நான் எண்ணுகின்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது தீபத் திருநாள் வாழ்த்துச் செய்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடரும் அந்த வாழ்த்துச் செய்தியில்,....

தீபாவளி பண்டிகை தினமான இன்று அஞ்ஞான இருளகற்றி அறிவொளி பரப்பும் எதிர்பார்ப்புடன் தீபங்கள் ஏற்றி 06

# கொரோனாவை ... க எதிரணியின் ஒத்துழைப்பும் அவசியம்

## அடக்கம் தொடர்பான தீர்மானம் இதுவரை இல்லை



**ஷம்ஸ் பாஹிம்,நிசாந்தன் சுப்ரமணியம்**

கொரோனாவை முற்றாக ஒழிப்பதற்கு எதிரணி தனது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பாராளுமன்றில் உரையாற்றும் போது கோரிக்கை விடுத்தார்.

பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய விடாது கோவிட் 19 தொற்றை கட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.சிறைச்சாலைகள் மற்றும் கைத்தொழிற்சாலைகளில் கொரோனா பரவுவதை தடுக்க முடிந்துள்ளது என்றார்.

கோவிட் 19 தொற்று தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றிய அவர், மேலும் கூறியதாவது,

தேசிய மட்ட திட்டமிடல் மற்றும் இணைப்பு செயற்பாட்டின் கீழ் ஜனாதிபதி செயலணி ஒன்றை ஜனாதிபதி நியமித்ததோடு நான் குழுவொன்றை அமைத்தேன். வாரத்தில் பல நாட்கள் ஜனாதிபதி இந்த குழுக்களை அழைத்து முடிவுகள் எடுத்து வருகிறார். பல தொழில்நுட்ப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. புதைப்பது தொடர்பில் தொழில்நுட்ப குழு உள்ளதோடு மருந்து தொடர்பில்,தொற்று நோய் தொடர்பில் குழு செயற்படுகிறது.

மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கி வருகிறோம். மக்கள் எமது கோரிக்கையை ஏற்று முகக் கவசம் அணிந்து வருவதோடு ஒரு மீட்டர் இடைவெளியை பேணி வருகின்றனர். 06

## தமிழர் வாழ்வில் நிரந்தர ஒளியேற்ற உழைக்கிறோம்

### தீபத்திருநாள் ஒளிமயமாகட்டுமென டக்ளஸ் வாழ்த்து



ஒளிமயமான எதிர்காலம் ஒவ்வொருவருக்கும் வாய்க்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்களை உணர்த்தும் வெளிப்பாடாகவே தீபங்கள் ஏற்றி தீமைகள் அகன்றதென மகிழ்ந்து கொண்டாடும் தீபத்திருநாளில் அனைவரினதும் எண்ணங்களும் ஈடேற வேண்டுமென வாழ்த்துகின்றேன் என கடற்றொழில் 06

## இந்துமத விழுமியங்களை எடுத்தியம்பும் உன்னத பண்டிகை

### நீதியமைச்சர் அலிசப்ரி தீபாவளி வாழ்த்து



இலங்கையிலும் மற்றும் உலகெங்கிலும் உள்ள இந்து மத நம்பிக்கையைப் பின்பற்றுபவர்களுக்கு இன்று ஒரு முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது.

தீபாவளியானது இரக்கம், தன்னலமற்ற தன்மையுடைய, நல்லிணக்கம், சகிப்புத்தன்மை மற்றும் 06

கொரோனா தொற்று மரணம்;

## நேற்று 53 ஆக அதிகரிப்பு மேலும் ஐவர் உயிரிழப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் மேலும் ஐந்து பேர் உயிரிழந்துள்ள நிலையில் வைரஸ் தொற்று மரணங்களின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 06

## தனிமைப்படுத்தல் ஊரடங்கு இன்று முக்கியமான தீர்மானம்

### நீக்கமா? நீடிப்பா என அறிவிக்கப்படும் –இராணுத் தளபதி



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவினை நீக்குவது தொடர்பான தீர்மானம் இன்று எடுக்கப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் ஊரடங்கு உத்தரவினை மீண்டும் அமுல் 06

## சுகாதார வழிமுறைகளுடன் தீபாவளியை கொண்டாடுவோம்

### மலையக மக்களுக்கு அமைச்சர் ஜீவன் வாழ்த்து



தனித்திரு, விழித்திரு, வீட்டிலிரு என்பதை தாரக மந்திரமாக கொண்டு இம்முறை தீபத்திருநாளை கொண்டாடுகின்றோம்.

எமக்கு நினைவிருக்கும் காலத்திலிருந்து சுகாதார ரீதியாக முன் எச்சரிக்கை கொண்ட தீபத்திருநாளை கொண்டாடுவது இதுதான் முதற்தடவையாகும் 06

### கொவிட் 19 காரணமாக அழைக்காதிருக்க முடிவு

### வீடுகளில் இடம்பெறும் மரணங்கள் தொடர்பான

## தீமை எனும் இருளை விரட்டி நன்மை எனும்